**Deposition of witness**

**(Chapter XXII Code of Criminal Procedure)**
**-----------**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| Calender | : | அசல் வழக்கு எண்.253-2022 |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | வா.சா.1.திரு.திருமணி த.பெ.முருகேசன் |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of  of the 08th day of February 2024

08.02.2024

O.S.No.253/2022

வா.சா.1.திரு.திருமணி த.பெ.முருகேசன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 03.03.1995 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் அசல் அது வா.சா.ஆ**-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் வழக்கு எண்.80/2011 ல் உள்ள பிராது சார்வு நகல் அது வா.சா.ஆ**-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மதுரை வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்துள்ள உத்தரவு சார்வு நகல் அது வா.சா.ஆ**-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.02.2021 தேதியிட்ட கையெழுத்து நிபுணரின் அறிக்கை சான்றிட்ட நகல் அது வா.சா.ஆ**-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.04.2021 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் அது வா.சா.ஆ**-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.06.2021 தேதியிட்ட சீர்திருத்தப் பத்திரம் சான்றிட்ட நகல் அது வா.சா.ஆ**-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் வழக்கு எண்.80/2011 வழக்கின் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள Not press Memo அது வா.சா.ஆ**-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.03.2022 தேதியில் அசல் வழக்கு எண்.80/2011 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு சான்றிட்ட நகல் அது வா.சா.ஆ**-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.03.2022 தேதியில் அசல் வழக்கு எண்.80/2011 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் அது வா.சா.ஆ**-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.11.2014 தேதியில் கருணாமூர்த்தி, 1ம் வாதிக்கு காவல்துறை விசாரணையின்போது எழுதிக்கொடுத்த வாக்குமூலம் (கடைசி பக்கத்தில் உள்ளது) அது வா.சா.ஆ**-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக 19.08.2021 தேதியில் மதுரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் அளித்த புகார் மனு கையிருப்பு நகல் அது வா.சா.ஆ**-11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள், பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 21.12.2021 தேதியில் தபால் மூலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் அளித்த புகார் மனு கையிருப்பு நகல் அதன் அஞ்சலக ரசிது அசல் அது வா.சா.ஆ**-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி தபாலை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் அது வா.சா.ஆ**-13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.01.2022 தேதியில் மதுரை மாவட்ட நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து எனக்கு அளிக்கப்பட்ட காவல் அழைப்பாணை அசல் அது வா.சா.ஆ**-14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.06.2022 தேதியில் மாவட்ட பதிவாளர் அவர்கள் பிறப்பித்த உத்தரவு நகல் அது வா.சா.ஆ**-15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(**மேற்படி ஆவணத்தின் அசல் அந்த உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்தததில் தாக்கல் செய்யப்பட்டதால் அந்த அசலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என சாட்சி கூறுகிறார்**).** துணைபதிவுத் தலைவர் அவர்களிடம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் கையிருப்பு நகல் அது வா.சா.ஆ**-16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.